# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2244/36 - 2021 සැප්තැම්බර් මස 11 වැනි සෙනසුරාදා - 2021.09.11

*2244/36 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)**

*சுங்க அறிவித்தல் இல. 2/ 2021 "பிணைமுறிக் குதங்கள்"*

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் மூலம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆக்கப்பட்ட அறிவித்தல்**

சுங்கப் பணிப்பாளர் நாயகம் கங்வாரிகே விஜித ரவிபிறிய ஆகிய நான், சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) இன் 69 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டும், இதே பிரிவின் மூலம் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்படுகின்ற தத்துவங்களின் பிரகாரத்திலான அவருடைய அனுமதியைக் கொண்டும், அவரது பணிப்புரைக்கு இணங்க பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தல் மூலமாக, இறக்குமதியாளரால்/ அத்தகைய குத இல்லங்களின் உரிமையாளர்களால் இறக்குமதி செய்யப்படுகின்ற மேற்கூறிய அட்டவணைகளின் 6 ஆம் நிரலின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை, அவற்றின் முதற்பதிவின் பொழுது தீர்வை செலுத்தப்படாது களஞ்சியப்படுத்தல், வைத்துப் பேணுதல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களுக்கான, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I மற்றும் II ஆகியவற்றின் 3 ஆம் நிரலின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிணைமுறிக் குதங்களை, பொதுப் பிணை, பிணை குதத்திலான தயாரிப்பு, தீர்வையற்ற கடைகள், ஊட்டற் பிணை மற்றும் தனியார் பிணை குதங்களை இத்தால் அனுமதியளித்து நியமிக்கின்றேன்.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் **ஜீ. வீ. ரவிபிறிய,**
சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைச் சுங்கம்,
சுங்க இல்லம்,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11,


1A - G 34933 — 26 (2021/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

| இல. | 1<br>பிணைகாரரது பெயர் மற்றும் விலாசம் | 2<br>பிணைக் குதத்தின் பதிவிலக்கம் | 3<br>பிணைக் குதத்தினது அமைவிடம் | 4<br>பிணைக் குதத்தினது இயல்பு | 5<br>கொள்ளளவு/ தரைப்பகுதி | 6<br>பிணைப்படுத்த முடியுமான பொருட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எம்/எஸ் கிறௌன் சிற்றி டெவலொப்பர்ஸ் (பிறைவட்) லிமிடட், இல. 498, காலி வீதி, கொழும்பு 03 | BD/PB/1201 | இல. 793/28, கடொல்கெல வத்த, லியன்கே முல்ல, சீதுவை | பொதுவான பிணை | 178, 118 சதுர அடி | பொதுவான பொருட்கள் |
| 2 | எம்/எஸ் லங்கா அஷோக் லேலன்ட் பீ.எல்.சீ., பனாகொட, ஹோமாகம | BD/NG/1209 | பனாகொட, ஹோமாகம | பிணை குதயில்லத்தி லான தயாரிப்பு | 30,030.9 சதுர அடி | வாகனத்தினைப் பொருத்துவதற் கான உதிரிப் பாகங்கள் |
| 3 | எம்/எஸ் எடிசன் எலக்றிகல்ஸ் அன்ட் டியுட்டி பிறி (பிறைவட்) லிமிடட், இல. 473-1/1, காலி வீதி, கொழும்பு 03 | BD/PB/1230 | மத்தளை சர்வதேச விமான நிலையத்திலான பயணிகள் வருகை கருமபீடம் | தீர்வையற்ற கடைகள் | 450 சதுர அடி | மதுபானம், பீயர், வைன், மென் பானங்கள், புகையிலை தயாரிப்புகள், மின்சார பொருட்கள் |
| 4 | எம்/எஸ் எடிசன் எலக்றிகல்ஸ் அன்ட் டியுட்டி பிறி (பிறைவட்) லிமிடட், இல. 473-1/1, காலி வீதி, கொழும்பு 03 | BD/PB/1231 | மத்தளை சர்வதேச விமான நிலையத்திலான பயணிகள் வெளிச்செல்லுகை கருமபீடம் | தீர்வையற்ற கடை | 600 சதுர அடி | மதுபானம், பீயர், வைன், மென் பானங்கள், பாகு (சிறப்புகள்), புகையிலை தயாரிப்புகள், மின்சார பொருட்கள் |
| 5 | எம்/எஸ் எடிசன் எலக்றிகல்ஸ் அன்ட் டியுட்டி பிறி (பிறைவட்) லிமிடட், இல. 473-1/1, காலி வீதி, கொழும்பு 03 | BD/PB/1232 | மாத்தளை சர்வதேச விமான நிலையத்திலான பயணிகள் வருகை கருமபீடம் | ஊட்டற் பிணை | 1,000 சதுர அடி | மதுபானம், பீயர், வைன், மென் பானங்கள், புகையிலை தயாரிப்புகள், மின்சார பொருட்கள் |

1983.04.22 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "பிணைமுறிக் குதங்கள்" எனும் 1/ 83 ஆம் இலக்க சுங்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அட்டவணையிலுள்ள விடய இல. 3 உடன் தொடர்பான பிணை குதத்தின் அமைவிடமானது நீக்கப்பட வேண்டுமென்பதோடு, அப்பிணைக் குதம் குறித்தான புதிய அமைவிடமானது, கீழே குறிப்பிடப்பட்டவாறு குறித்த அறிவித்தலில் உள்ளீடு செய்யப்படவும் வேண்டும்.

## அட்டவணை II

| இல. | 1<br>பிணைகாரரது பெயர் மற்றும் விலாசம் | 2<br>பிணைக் குதத்தின் பதிவிலக்கம் | 3<br>பிணைக் குதத்தினது அமைவிடம் | 4<br>பிணைக் குதத்தினது இயல்பு | 5<br>கொள்ளளவு/ தரைப்பகுதி | 6<br>பிணைப்படுத்த முடியுமான பொருட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எம்/எஸ் பிரேமசிறி ஸ்டோர்ஸ் (பிறைவட்) லிமிடட், இல. 130, கொட்டா வீதி, பொரல்ல, கொழும்பு 08 | BD/PB/225 | இல. 17/1, நாரம்மினிய, பியகம வீதி, களனிய | தனியார் பிணை | 5,480 சதுர அடி | மதுபானம், பீயர், வைன், மென் பானங்கள், பாகு (சிறப்புகள்) புகையிலை தயாரிப்புகள் |

09-135

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.